மாகாணக் கல்வித் திணைக்களம்- சப்ரகமுவ மாகாணம்

தமிழ் மொழியும் இலக்கியமும்

வாரம்-04

தரம்-10

ஆக்கியோன்- பொ.சந்ரகுமார். கே/தெஹி/கந்தலோயா த.ம.வி

**கீழ்வருவனவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. "எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்...." என்பதில் **இரவாது** என்பதன் ஒத்த பதம்
   1. கொடுக்காது
   2. யாசிக்காது
   3. கொடுத்தல்
   4. யாசித்தல்

02. "கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்....." என்பதில் **கேண்மை** என்பதன் எதிர்ப்பதம்
   1. பகைமை
   2. தோழமை
   3. நட்புடைமை
   4. அன்புடைமை

03. "யானை அனையவர் நண்பொரீஇ….." இதில் **ஒரீஇ** என்பது குறித்து நிற்பது
   1. இசையளபெடை
   2. ஒற்றளபெடை
   3. உயிரளபெடை
   4. இன்னிசையளபெடை

04. ஆந்தை ……………………….. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை நிரப்புக.
   1. அழும்
   2. அழறும்
   3. அலறும்
   4. அளறும்

05. **பிணம்** என்பதை குறிக்கும் சொல்
   1. அலம்
   2. அளம்
   3. அழம்
   4. யாவும் பிழை

06. **இரை, இறை** என்பன குறிக்கும் பொருள் முறையே
   1. உணவு, சத்தம்
   2. வரி, கடவுள்
   3. கடவுள், உணவு
   4. உணவு, வரி

07. **ஊண், ஊன்** என்பன குறிக்கும் பொருள் முறையே
   1. உணவு, மாமிசம்
   2. இறைச்சி, மாமிசம்
   3. சாப்பாடு, உணவு
   4. இறைச்சி, உணவு

08. **மணம், மனம்** என்பன குறிக்கும் பொருள் முறையே
   1. உள்ளம், வாசைன
   2. வாசனை, உள்ளம்
   3. வாசனை, நாற்றம்
   4. உள்ளம், அகம்

09. **மனம், உள்ளம், வீடு** என்பவற்றைக் குறிக்கும் ஒரே சொல்
   1. நெஞ்சு
   2. மனை
   3. அகம்
   4. உறையுள்

10. **ஆலம்** என்பதன் எதிர்ப்பதம்

1. மரம்
2. நஞ்சு
3. விடம்
4. அமிர்தம்

**கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள சொற்களுக்கு தனித்தனியே பொருள் தருக.**

11. ஒலி, ஒளி, ஒழி
12. கலகம், களகம், கழகம்
13. உரவு, உறவு
14. கிரி, கிறி
15. கணி, கனி

**பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

16. சங்கமருவிய கால நீதி நூல்கள் கூறும் நீதிக்கருத்துக்களை விளக்குக.
17. நாயக்கர் கால நீதி நூல்கள் கூறும் நீதிக்கருத்துக்களை விளக்குக.
18. "யானை அனையவர் நண்பொரீஇ….." என்ற பாடலில் கையாளப்பட்டுள்ள அணியை விளக்குக.
19. "கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே…." எனத்தொடங்கும் பாடலில் கூறப்படும் இனிமையான கருத்துக்களை விளக்குக.
20. நீதிப்பாடல்கள் மூலம் நீர் பெற்றுக் கொண்ட படிப்பினைகளை தொகுத்துரைக்க.